தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமன்றத்தின் ஐம்பதாவது கூட்டத் தொடர்.

சனிக்கிழமை, 1975 மார்ச் 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

Total expenditure incurred on the visits of the Prime Minister on 19th September, 1973.

*Q.—162. THIRU K. ARIVAZHAGAN (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total expenditure incurred on the visit of the Prime Minister on 19th September 1973 to Madurai, Pamban and Karaikudi ; and

(*b*) the expenditure on the construction of an airstrip for helicopter landing?

19—9—1973-ல் பிரதமர் வந்ததில் ஏற்பட்ட மொத்தச் செலவு

திரு. க. அறிவழகன் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 19—9—1973-ஆம் தேதியன்று பாரதப் பிரதமர் மதுரை, பாம்பன், காரைக்குடி ஆகிய ஊர்களுக்கு வந்ததில் ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு ?

(இ) ஹெலிகாப்டர் தளம் அமைக்க மட்டும் ஆன செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பிரதமர் மதுரை, பாம்பன், காரைக்குடி ஆகிய ஊர்களுக்கு வந்ததற்கு மொத்தச் செலவு ரூபாய் 3,47,698·89 காசு ஆயிற்று. ஹெலிகாப்டர் தளம் மாத்திரம் அமைக்க ஆன செலவு ரூபாய் 1,74,600 ஆகும்.

திரு. டி. சந்தோஷம் : தலைவரவர்களே, அந்த மொத்தச் செலவில் மத்திய அரசு ஏதாவது ஒரு பங்கை ஏற்றுக் கொள்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இல்லை. முழுவதும் மாநில அரசின் செலவுகள் தான்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பொது நிகழ்ச்சிகளுக்காக மட்டும் வந்தார்களா அல்லது கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தச் சுற்றுப்பிரயாணத்தில் பாம்பன் பாலம் அடிக்கல் நாட்டு விழாவிற்காக வருகை தந்தார்கள். கட்சி நிகழ்ச்சிகளுக்காக என்று வந்தாலும், அந்தச் செலவுகளை அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இப்போது விதி முறைகள் இருக்கின்றன.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் பிரதமருக்கு ஏதாவது கட்சிக் கூட்டம் இருந்ததா ? சென்னையிலே அல்லது வேறு ஊரிலே ஏதாவது இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் இருந்ததாக எனக்குத் தகவல் இல்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, was it incurred at the request of the Central Government or the Prime Minister, or was it incurred by the State Government in their own discretion ?

MR. CHAIRMAN : The Hon. the Chief Minister has already said that it was incurred by the State Government.

THIRU G. VASANTHA PAI : Sir, what I wanted to know was this. Was it incurred at the request of the Prime Minister or the Central Government, or was it incurred by the State Government in their own discretion ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதிலே யாருக்கும் விகிதாசாரம் கிடையாது என்று நான் முதலிலேயே சொன்னேன். முழுச் செலவையும் மாநில அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வி மாநில அரசே அழைத்து பிரதமர் அவர்கள் வந்தார்களா, அல்லது மத்திய அரசிலிருந்து தாங்களாகவே வந்தார்களா என்பது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பாம்பன் பாலம் அடிக்கல் நாட்டு விழாவிற்காக மாநில அரசின் அழைப்பின் பேரில் தான் வந்தார்கள். ஆனால் மாநில அரசு அழைத்து அவர்கள் வந்தாலும் சரி, தானாகவே வந்தாலும் சரி, மாநில அரசுதான் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கின்றன.

THIRU G. VASANTHA PAI : Sir, the question was whether a request was made by the Central Government to incur the expenditure or not.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்தச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது "ரெக்குவஸ்ட்" அல்ல, அப்படிப் பட்ட இன்ஸ்ட்ரக்ஷனே இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, I presume that this expenditure does not include the expenditure incurred for the Prime Minister to travel by special plane from Delhi and going back. May I know whether it is so, Sir ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அது சேராது. அவர்கள் டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்தது பற்றியது. இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்ற நண்பர் திரு தென்னரசு அவருடைய மூலக் கேள்வியில் மதுரை, பாம்பன், காரைக்குடி ஆகிய இடங்களுக்கு என்று குறிப்பிட்டுக் கேட்டிருக்கின்றார்கள். நான் ரூ. 3,47,698 என்றும், ஹெலிகாப்டர் தளம் அமைக்க ரூ. 1,74,600 என்றும் பதில் அளித்தேன். மொத்தச் செலவு என்று கேட்டால் சென்னை நகரத்தில் செலவையும் சேர்த்து ரூ. 3,93,000 சொச்சம். அதிலே விமானச் செலவு சேரவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எத்தனை நாட்களுக்கு இந்த ரூ. 3 லட்சம் அளவுக்குச் செலவாகியிருக்கின்றது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்குச் செலவாயிற்று.

THIRU A.R. DAMODARAN Sir, in view of the frequent trips taken by Central Ministers, may I request the Hon. the Chief Minister to let this House know whether in the National Development Council this issue cannot be raised and advice given to the Central Government to practise some economy in expenditure in view of the difficult conditions that prevail in the country?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சில நேரங்களில் பிரதமரை சில நிகழ்ச்சிகளுக்காக மாநில அரசே அழைக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே அப்படி அழைக்கின்ற நேரத்தில் பிரதமர்

வருகிறபோது, பாதுகாப்புச் செலவுகள் அதிகமாகச் செய்யப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் நன்றாக அறிவார்கள். பாதுகாப்புச் செலவு என்றால், வழியிலே அரண் போல பாரிகேட், கம்புகளை வைத்து அடைப்பது போன்ற காரியங்களுக்கு அதிகச் செலவாகிவிடுகிறது இதில் கட்சிக் கூட்டங்களுக்காக அதிகபடியாக ஆகின்ற செலவுகளைக் கூட மாநில அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நிலைமையை வேண்டுமானால் தவிர்க்க வேண்டும் என்று நாம் எடுத்துக் கூறலாம்.

THIRU G. VASANTHA PAI : Sir, are the Government aware that the Prime Minister in answer to some letters which appeared in the Press said that she did not want these barricades or other arrangements to be made but that they were exculsively done by the State Government for security reasons ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு இந்திய நாட்டுப் பிரதமருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது எல்லா மாநில அரசுகளின் தலையாய கடமையாகும், காவல் துறையினுடைய முக்கியமான கடமையும் ஆகும். இப்போது ஏன் இவ்வளவு பாதுகாப்பு என்று கேட்கப் படுகிறது. ஏதாவது ஒரு சிறு சம்பவம் நடந்து விட்டால், ஏன் பாதுகாப்பு அளிக்கவில்லை என்று நாமேதான் கேட்போம்.

THIRU G. VASANTHA PAI : Sir, may I bring to the notice of the Hon. the Chief Minister that both the 'pandals'—the 'pandal' in the I.I.T. Convocation as well as the 'pandal' in the Diamond Jubilee Celebration at Queen Mary's College—cost this Government enormous amounts, which could have been avoided ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஐ.டி.ஐ. விழாவிற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்தார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது, அங்கே பந்தல் போடப்படவில்லை. ஏற்கெனவே இருந்த கொட்டகை தான் உபயோகப்படுத்தப்பட்டது.

THIRU G. VASANTHA PAI : No, Sir; it is not correct. The 'pandal' cost three lakhs of rupees for the I.I.T. which I hope could have been used for a more useful purpose.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஐ. டி. ஐ. போன்ற விழாக்களுக்கு பிரதமர் வருகின்றபோது ஒரு பந்தல்கூட போடாத அளவுக்கு அவ்வளவு கஞ்சர்களாக மாநில அரசுகள் இருக்க முடியாது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தேர்தல் கூட்டங்களுக்கு நம்முடைய நாட்டுப் பிரதமரோ, அமைச்சர்களோ வருகிறபோது, அதற்கான செலவுகளை யார் ஏற்றுக்கொள்வது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய அரசிலிருந்து மாநிலங்களுக்கு பிரதமர் சுற்றுப்பயணம் வருவதற்காக என்று

விதி முறைகள் வந்திருக்கின்றன. அந்த விதிமுறைகளில் உள்ள விஷயங் களை நான் இங்கே சொன்னால் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம் என்று கருதுகிறேன்.

"As the security of the Prime Minister is the concern of the State, all arrangements for putting up the rostrum, the barricades, etc. at the meeting places including that of an election meeting will have to be met by the State Government concerned.

In the case of public meetings other than election meetings, all expenditure on the arrangements including provision of rostrum, the setting up of barricades, making lighting arrangements, public address system, etc., will be borne by the State Government. The term "public meetings" mentioned in this paragraph shall cover not only meetings organised by the State Governments but also those held by the political parties to which the general public has access.

In the case of election meetings, all expenditure on Police, setting up of barricades and making lighting arrangements will be borne by the State Government, while expenditure on the public address system and any decorative arrangements will be the responsibility of the political party concerned.

The expenditure on all these items may, in the first instance, be borne by the State Government and then recovered from the political party concerned. In regard to the rostrum only 25 per cent of the cost of the rostrum or Rs. 2,500 whichever is less shall be contributed by the party as a rostrum has to have certain specifications because of security considerations.

THIRU G. VASANTHA PAI: Sir, are the Government aware that the I.I.T has got a permanent open air theatre which is used for all functions?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் சொல்வது போல பந்தல் களுடைய செலவு ரூ. 4 லட்சம் என்ற அளவில் ஆகியிருக்க முடியாது. ஒவ்வொரு இடத்திலேயும் ஒவ்வொரு பெரிய மண்டபம் என்று பெர்ம ணண்ட்டாக விழாவிற்கு என்று கட்டி வைத்துக் கொள்வது என்பது இயலாத காரியம். இந்த அரசைப் பொறுத்த வரையில் சிக்கனத்தைக் கையாள வேண்டும் என்பதற்காகத்தான் நாம் ஆண்டுதோறும் கொண் டாடும் ஜனவரி 26, குடியரசு நாள் அன்று, ஏற்கெனவே பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து கடற்கரை ஓரத்தில் பந்தல் போட்டுக் கொண்டிருந்தோம். இப்படி ஒரு அரை மணி நேரம் நடை

பெறுகின்ற விழாவிற்கு பந்தல்கள் எல்லாம் தேவையில்லை என்று அந்தப் பந்தல்கள் இல்லாமலேயே கடந்த 2, 3 ஆண்டுகளாக குடியரசு நாள் விழாவை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம்.

THIUR G. VASANTHA PAI: Sir, of course, we feel that when a person of the status of Prime Minister comes, a 'pandal' is necessary and I do not dispute it. But the amount spent on the 'pandal' at both the places, I am told, amounts nearly to four lakhs of rupees. Could not a permanent building have been put up for that purpose to receive all dignitaries and also to ensure security arrangements?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வம் தெரிகிறது. இந்த ஐ. ஐ. டி. க்கு நிரந்தரமான ஒரு மண்டபம் வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அதற்காக பிரதமரின் விஜயத்தைப் பயன் படுத்துகின்றார்கள்.

THIRU G. VASANTHA PAI: Sir, the Hon. the Chief Minister is misinterpreting my question. The Hon. the Chief Minister said that it was very difficult to provide such arrangements at each of these places. But, I am only pointing out that the I.I.T. has already got an open-air theatre where this function could have been held.

Mr. CHAIRMAN: I request the hon. Member Thiru Vasantha Pai to give chance to other hon. Members also, by not repeating his supplementary questions.

THIRU G. VASANTHA PAI: Sir, the Hon. the Chief Minister was replying to my question and so, I can also have a chance. When hundreds of questions are put when their turn comes, let me not be shut out.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையில், பிரதமர் அவர்கள் வருகின்றபோது அவர்களைச் சார்ந்த கட்சி செலவுத் தொகையைப் பகிர்ந்து செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். 1971 தேர்தல் சமயங்களிலே நம்முடைய பிரதமர் அவர்கள் இங்கே தேர்தல் கூட்டங்களிலே கலந்து கொண்டார்கள். அப்போது கலந்து கொண்ட கூட்டத்திற்கான செலவுத் தொகை அவர்களுடைய கட்சிக்காரர்களிடமிருந்து கேட்கப்பட்டதா? எவ்வளவு ரூபாய் கேட்கப்பட்டது? எவ்வளவு ரூபாய் அவர்களால் கொடுக்கப் பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தேர்தல் நேரத்தில் நம்முடைய மாநிலத்திற்கு வந்ததையொட்டி 1971-ல் மாத

திரம் அல்ல, 1967லிருந்தே அந்தக் கட்சிகளிடமிருந்து கேட்கப்பட்டு வருகிறது. இப்போது விவரங்கள் கையில் இல்லே. அந்தக் கட்சிக் காரர்கள் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எதுவும் தரவில்லே.

திரு. டி. சந்தோஷம்: தலேவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் படித்த விதிமுறைகளிலே பிரதமரின் வருகையைப் பற்றித் தான் வந்திருக்கிறது. அதே விதிமுறைகள் மற்ற மத்திய அமைச்சர்கள் வந்தாலும் பொருந்துமா அல்லது அவர்களுக்கு என்று தனியாக ஏதாவது விதி முறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலேவரவர்களே, இது பிரதமர் அவர்களுடைய வருகைக்காக மாத்திரமே அமைக்கப்பட்ட விதி முறைகள். அந்த விதி முறைகள் தான் மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலேவரவர்களே, மாநில அமைச்சர் வேறு மாநிலங்களுக்கு தேர்தலுக்காகச் சென்றால் ஏற்படக்கூடிய செலவுகளே அங்கே இருக்கின்ற மாநில அரசுகள் ஒப்புக்கொள்ளக்கூடிய விதி முறை கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலேவரவர்களே, அப்படி எதுவும் இல்லே. அங்கே சென்றால் நாமே தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது நம்முடைய விதி.

Increased Pay to Part-time Water Carriers.

***163 Q. THIRU D. SANTOSHAM: —Will the Hon. the Chief Minister be pleased to state—**

(a) whether part-time Water Carriers in Government Offices have been recommended an increased pay of Rs. 30 per month by the Second Tamil Nadu Pay Commission; and

(b) if so, whether the same has been implemented?

பகுதி நேர நீர் வழங்குவோருக்கு உயர்த்தப்பட்ட ஊதியம்.

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசு அலுவலகங்களிலுள்ள பகுதி நேர நீர் வழங்குவோருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் உயரிய சம்பளம் வழங்கிட தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அது செயற்படுத்தப்பட்டுவிட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லே.

(இ) இவ்வினா எழவில்லே.

திரு. டி. சந்தோஷம்: தலேவரவர்களே, ஒருவேளே அவர்கள் மிகக் கொஞ்சம் பேர்களாக இருப்பதனுலேயே அவர்களுடைய கோரிக்கையை கவனிக்காமல் விட்டிருக்கலாம். மற்ற ஊழியர்களுக்குச் சம்பளம்